RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-9 | 09 ஜனவரி | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## இஸ்ரோ புதிய தலைவராக கன்னியாகுமரி சேர்ந்தவர் நியமனம்



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின்(ISRO)புதிய தலைவராக குமரி மாவட்டத்தை சேர்ந்த வி.நாராயணன் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போதைய தலைவரான சோம்நாத்தின் பதவிக்காலம் முடியவுள்ள நிலையில், வி.நாராயணன் ஜனவரி 14 ஆம் தேதி பொறுப்பேற்கவுள்ளார். இவர், திருவனந்தபுரம் வலியமலாவில் லிறிஷிசியின் இயக்குநராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## டெல்லி சட்டப்பேரவைக்கு பிப்.5ல் தேர்தல்: 70 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக வாக்குப்பதிவு

புதுடெல்லி, ஜன.9



டெல்லி சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாக பிப்ரவரி 5ம் தேதி தேர்தல் நடைபெறும் என இந்தியதேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. ஈரோடு கிழக்கு, உத்தர பிரதேசத்தின் மில்கிபூர் ஆகிய தொகுதிகளுக்கும் அதே நாளில்தான் இடைத்தேர்தல் நடைபெறுகிறது. பிப். 8ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் டெல்லியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: டெல்லி சட்டப்பேரவைக்கு மொத்தம் உள்ள 70 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக பிப்ரவரி 5ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் ஜன.10ம் தேதி தொடங்குகிறது. வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கடைசி தேதி ஜன.17. வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை ஜன.18ம் தேதி நடைபெறும். வேட்பு மனுக்களை திரும்ப பெறுவதற்கான கடைசி தேதி ஜன.20 ஆகும். இதில் பதிவான வாக்குகள் பிப்.8ம் தேதி எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்படும்.

100 கோடி வாக்காளர்கள்: டெல்லி சட்டப்பேரவை தேர்தலில் மொத்தம் 1.55 கோடி பேர் வாக்களிக்க உள்ளனர். இதில், ஆண் வாக்காளர்கள் 83.49 லட்சம். பெண் வாக்காளர்கள் 71.74 லட்சம். இளம் வாக்காளர்கள் (2029 வயது) 25.89 லட்சம், முதல் முறை வாக்காளர்கள் (1819 வயது) 2.08 லட்சம் பேர் உள்ளனர். இந்தியாவின் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 99 கோடியை கடந்து 100 கோடியை நெருங்கியுள்ளது.

தங்கத்தின் தரம் நம் தேர்தல்: தங்கத்தின் தரம் போன்ற தேர்தல் முறைகளை கொண்டது இந்தியா. இது, நமது தேர்தல்களில் பொதுவான பாரம்பரியமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. எனவே, ஆணையத்தில் எந்த முறைகேடுகளும் நடக்க வாய்ப்பில்லை. ஏனெனில் தேர்தல் நடைமுறைகள் அவ்வளவு புள்ளிவிவரத்துடன் உள்ளது. தனிப்பட்ட நபர்கள் தவறு செய்தால் தண்டிக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் குறைபாடுகள் மற்றும் நம்பகத்தன்மைக்கு எதிராக எந்த ஆதாரங்களும் இல்லை. செல்லாத வாக்குகள் என்ற கேள்விக்கும் இடமில்லை. அதேபோன்று மோசடி செய்வதும் சாத்தியமில்லை. இதனை, உச்ச நீதிமன்றமே தெளிவு படுத்தியுள்ளது. பல்வேறு மாநில உயர் நீதிமன்றங்களும் இதே கருத்தையே தெரிவித்துள்ளன. எனவே, மீண்டும் வாக்குச் சீட்டு தேர்தல் முறைக்கு திரும்ப முடியாது. அதற்கான சாத்தியக்கூறுகளும் இல்லை. வெளிப்படைத்தன்மைதான் இந்திய தேர்தல் ஆணையத்தின் முக்கிய தூண். இவ்வாறு ராஜீவ் குமார் தெரிவித்தார்.

ஈரோடு இடைத்தேர்தல்: ஈரோடு கிழக்கு தொகுதிக்கு 2021ம் ஆண்டு நடந்த தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திருமகன் ஈவெரா வெற்றி பெற்றார். அவரது மறைவுக்கு பிறகு, 2023 பிப்ரவரி 27ம் தேதி நடந்த இடைத்தேர்தலில், திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட ஈவிகேஎஸ் இளங்கோவன் வெற்றி பெற்றார். உடல்நலக்குறைவால், கடந்த ஆண்டு டிச.14ம் தேதி ஈவிகேஎஸ் இளங்கோவன் மறைந்தார். இதையடுத்து, ஈரோடு கிழக்கு தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது. இங்கு பிப்.5ல் இடைத்தேர்தல் நடைபெறும் என நேற்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதையடுத்து ஈரோடு கிழக்கு தொகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தன.

## கம்யூனிசம் என்பது வறட்டு தத்துவம் அல்ல, சமூக விஞ்ஞானம் கம்யூனிசம் குறித்த ஆ.ராசா பேச்சுக்கு முத்தரசன் கண்டனம்

சென்னை, ஜன.9



'சுயநலவாதிகளான தலைவர்களால் கம்யூனிஸ கொள்கை தோற்றது' என்று ஆ.ராசா எம்பி பேசியதை கண்டித்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், "திமுக துணைப் பொதுச்செயலாளர் என்ற தலைமைப் பொறுப்பில் இருந்து வரும் ஆ.ராசா, இப்படி பொறுப்பற்ற முறையில் பேசி வருவதை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். யாகாவாராயினும் நாகாக்க" என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக முத்தரசன் வெளியிட்ட அறிக்கையில், "சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் நேற்று (07.01.2025) நடந்த நிகழ்வில் பங்கேற்று பேசிய திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா "கம்யூனிஸ்டுகள் சுயநலவாதிகளாக மாறிவிட்ட காரணத்தால் கொள்கை தோற்றுப் போய் விட்டது" என்ற அரிய கண்டுபிடிப்பை வெளியிட்டுள்ளார். கம்யூனிஸ்டு தத்துவத்தின் மீது தலைவர்கள் வைக்கும் நம்பிக்கை குறைந்துவிட்டது என்ற அவதூறுச் செய்தியை ஆதாரமாக காட்டுகிறார்.

கடந்த 1989-90ஆம் ஆண்டுகளில் சோவியத் யூனியனில் கம்யூனிஸ்டு ஆட்சி வீழ்ந்ததும், இதனைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடந்த ஆட்சி மாற்றங்களும் உலகளாவிய முக்கிய நிகழ்வுகளாகும். இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியும், இதர கம்யூனிஸ்டு கட்சிகளும் விரிவான ஆய்வு செய்து, அதற்கான காரணங்களை அறிவியல் பூர்வமாக வெளியிட்டுள்ளன. இவைகளை ஆ.ராசா சார்பு நிலை தவிர்த்து கற்றறிந்து பேச வேண்டும்.

"கம்யூனிசம் பிறந்த இடத்திலேயே செத்து விட்டது" "முதலாளித்துவத்துக்கு மாற்று இல்லை" என்று தத்துவ எதிரிகள் கொக்கரித்துக் கொண்டிருந்த வேளையில், கருணாநிதி "சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்பட்டது தோல்வி அல்ல; அது தற்காலிக பின்னடைவு மட்டுமே" என்று கூறியதை ஆ.ராசா தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

கம்யூனிஸ்டுகளின் நேர்மையை, எளிமையை, தன்னல மறுப்பை, பொதுநல வேட்கையை, போராட்ட குணத்தை வர்க்க எதிரிகளும் ஒப்புக் கொள்வதை நாடறியும் என்பதை ஆ.ராசாவும் அறிந்திருக்க வேண்டும். போகிற போக்கில் "கம்யூனிஸ்டுகள் சுயநலவாதிகளாக மாறிவிட்டார்கள்" என்று குற்றம் சாட்டும் ஆ.ராசா, அவர் கண்டறிந்த கம்யூனிஸ்டு சுயநலவாதிகள் பட்டியலை வெளியிட வேண்டும்.

கம்யூனிசம் என்பது வறட்டு தத்துவம் அல்ல, அது மனிதகுலம் நிறைவாக, நீடித்த அமைதியும், நிரந்தர சமாதானமும் நிலவும் முற்றிலும் புதுமையான சமூக அமைப்பில் வாழும் வாழ்க்கை முறை பற்றிய சமூக விஞ்ஞானம். மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து நடந்து வரும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறு தான் மனிதகுல வரலாறாகும். இதில் இயற்கை நிலை சமூகம் படிப்படியாக மாறி இன்று நிதி மூலதனமும், குழும நிறுவனங்களுமாக ஆதிக்கம் செலுத்தும் உச்சபட்ச ஏகாதிபத்திய சமூக அமைப்பாக வளர்ந்து, மீள முடியாத நெருக்கடியில் சிக்கி, சாவில் இருந்து தப்பித் துக் கொள்ள துடிக்கும் நோயாளியாக தவித்து வருகிறது.

சமூக நோயை குணப்படுத்தும் கம்யூனிசம் வெல்லும் எனும் காட்சியை ஆ.ராசாவும் காணும் காலம் வரும்.

உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு இல்லாத காலத்தில் பட்டியலின சமூகத்தில் இருந்து தலைவர்களை உருவாக்கி, நாடறிய உயர்த்தி பிடித்த கம்யூனிஸ்டுகள் மீது, இட ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகுதி தேடி, தேர்வு செய்யும் நிலையில் இருக்கும் பகுத்தறிவாளர்கள் குற்றம் சாட்டுவது பொறுப்பற்ற செயலாகும். இதில் திமுகழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் என்ற தலைமைப் பொறுப்பில் இருந்து வரும் ஆ.ராசா, இப்படி பொறுப்பற்ற முறையில் பேசி வருவது உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். யாகாவாராயினும் நாகாக்க." என்று கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

## 'அரசுப் பள்ளியில் படித்து உயர்ந்தவர்...' இஸ்ரோ தலைவரான வி.நாராயணனுக்கு முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜன.9



அரசுப் பள்ளியில் படித்து இஸ்ரோவின் தலைமை பொறுப்புக்கு உயர்ந்த வி.நாராயணனை எண்ணி வியக்கிறேன் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தனது சமூகவலைதளப் பக்கத்தில் முதல்வர் ஸ்டாலின் பகிர்ந்துள்ள வாழ்த்தில், "இஸ்ரோ புதிய தலைவராகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த முனைவர் வி. நாராயணன் நியமிக்கப்பட்டிருக்கும் செய்தி மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அவருக்கு என் உளம்நிறைந்த வாழ்த்துகள் !

தமிழ்நாட்டின் குமரி மாவட்டத்தில் எளிய பின்னணியில் பிறந்து, அரசுப்பள்ளியில் படித்து, உதவியாளர் நிலையில் இஸ்ரோவில் பணிக்குச் சேர்ந்த நாராயணன் இன்று அதன் தலைமைப் பொறுப்புக்கு உயர்ந்திருக்கிறார் எனில், அதன் பின் எத்தகைய ஆர்வமும், கடின உழைப்பும் இருக்கும் என்பதை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.

சந்திரயான் 2, சந்திரயான் 3, ஆதித்யா எல்1, ககன்யான் என உலக அரங்கில் இந்தியாவின் பெருமைக்குக் காரணமான பல விண்வெளி ஆய்வுத் திட்டங்களில் பங்களித்த தொடர்ந்து பங்களித்து வரும் நாராயணின் தலைமையில் இஸ்ரோ உறுதியாகப் புதிய உயரங்களைத் தொடும்! நாராயணனின் பயணம் அவரைப் போல மேலும் பல தமிழ்நாட்டு மாணவர்கள் சாதனையாளர்களாக உருவாக ஊக்கமளிக்கும்!" எனக் குறிப்பிட்டுள்ளார்.

2 ஆண்டுகள் பதவி: வி.நாராயணன் தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இஸ்ரோவில் கடந்த 1984 ஆம் ஆண்டு பணிக்கு சேர்ந்த வி.நாராயணன் இதுவரை ஏஎஸ் எல்வி, பிஎஸ்எல்வி, ஜிஎஸ் எல்வி எனப் பல்வேறு முக்கியப் பொறுப்புகளை வகித்துள் ளார். தற்போது இவர் திருவனந்தபுரத்தில் உள்ள எல்பிஎஸ்சி., யின் (LPSC) இயக்குநராக பணியாற்றி வருகிறார். இந்நிலையில், இரண்டு ஆண்டுகள் அல்லது மறு அறிவிப்பு வரும் வரை வி.நாராயணன் இஸ்ரோ தலைவராக, இந்திய விண்வெளித் துறை செயலராக செயல்படுவார் என மத்திய அமைச்சரவையின் நியமனக் குழு (ACC) அறிவித்துள்ளது.

தலைவர்கள் வாழ்த்து: இஸ்ரோ தலைவர் வி.நாராயணனுக்கு தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் தங்களின் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவின் புதிய தலைவராக வி. நாராயணன் தேர்ந்தெடுக்கப்பட்டது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற விஞ்ஞானியான அவருக்கு, தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் மனப்பூர்வமான வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் பள்ளியில் படித்து, தனது அயராத உழைப்பினால் உயர்ந்த நிலைக்கு வந்தவர். அவருடைய வளர்ச்சி மிகவும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது. சந்திராயன் 3 திட்டம் வெற்றி பெற சிறப்புடன் செயல்பட்டவர் வி. நாராயணன்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சியில் தமிழகத்தின் பங்கு நீண்டகாலமாக அதிகரித்து வருகிறது. அந்த வகையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வி. நாராணயன் இந்திய விண்வெளித்துறையில் மகத்தான சாதனைகளை புரிவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அவரது முயற்சி வெற்றி பெற தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் வாழ்த்துகிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

"இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான இஸ்ரோவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் தமிழர் வி.நாராயணனுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். விண்வெளித் துறையில் இந்தியா ஏராளமான சாதனைகளைப் படைத்துள்ள நிலையில் புதிய தலைவரான நாராயணன் தலைமையில் புதிய உச்சங்களைத் தொடும் என்று நம்புகிறேன்." என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, "இஸ்ரோவின் தலைவராக நியமிக்கப்பட்ட வி நாராயணனுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த வி நாராயணன், இந்தியாவின் கிரையோஜெனிக் இயந்திர வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றினார். நிலவின் தென் துருவப் பகுதியில் ரோவரை தரையிறக்கிய உலகின் முதல் நாடு என்ற பெருமையைப் பெற்ற இஸ்ரோவின் தலைவரான சோம்நாத்துக்கும் நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

## யுஜிசி விதிமுறைகளை மாற்றி மாநில உரிமைகளைப் பறிப்பதா? மத்திய அரசுக்கு வைகோ கண்டனம்

சென்னை, ஜன.9



யுஜிசி தன்னாட்சி அமைப்பை பயன்படுத்தி மாநிலங்களின் உரிமைகளை நசுக்குவதை ஏற்க முடியாது. ஒன்றிய அரசு உடனடியாக யுஜிசி விதிமுறைகள் திருத்த வரைவு அறிக்கையை திரும்பப் பெற வேண்டும் என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "பல்கலைக்கழக மானிய குழு யுஜிசி விதிமுறைகளில் திருத்தம் செய்வதற்கு வரைவு அறிக்கை ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டிருக்கிறது. ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் புதிய வரைவு விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வெளியிட்டு இருக்கிறார். 2018 ஆம் ஆண்டின் "பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் பிற கல்வி பணியாளர்களை நியமிப்பதற்கான குறைந்தபட்ச தகுதிகள் மற்றும் உயர்கல்வியில் தரத்தை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள்" என்ற விதிமுறைகளை திருத்தம் செய்து, "பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் பிற கல்வி பணியாளர்களை நியமித்தல் மற்றும் பதவி உயர்வு அளிப்பதற்கான குறைந்தபட்ச தகுதிகள் (2025) விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்" என்ற வரைவை உருவாக்கியுள்ளது.

இந்த புதிய விதிமுறையின் படி துணைவேந்தர் நியமனத்திற்கான தேடுதல் குழுவை பல்கலைக் கழக வேந்தரான ஆளுநர் மட்டுமே நியமனம் செய்ய முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதில், ஆளுநர் ஒருவரையும், யுஜிசி தலைவர் ஒருவரையும், பல்கலைக் கழகம் ஒருவரையும் நியமனம் செய்வர் என கூறப்பட்டுள்ளது.

துணைவேந்தர் தேடுதல் குழுவில், மாநில அரசின் சார்பில் பிரதிநிதி இடம்பெற வேண்டும் என்று தற்போது உள்ள விதிமுறை நீக்கப்படு கிறது. துணைவேந்தர் பொறுப்புக்கு கல்வியாளர் அல்லாதவர்களையும், தனியார் துறையில் பணியாற்றியவர்களையும் நியமனம் செய்வதற்கு ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. துணைவேந்தர் பதவிக் காலம் 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டு புதிய வரைவு தயார் செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய விதிமுறைகளின் படி, உதவிப் பேராசிரியர் மட்டத்தில் நுழைவு நிலைப் பதவிக்கு நியமனம் கோரும் விண்ணப்பதாரர் யுஜிசி நெட் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இணைப் பேராசிரியர் மற்றும் பேராசிரியர் நிலைகளில் பணி நியமனம் செய்யப்படுவதற்கு, பிஎச்டி கட்டாயம் மற்றும் பேராசிரியர் பதவிக்கு உயர்த்தப்படுவதற்கு குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் தேவை.

இதைப் போல துணைவேந்தர்கள் நியமனத்திற்கும் 1949 இல் ராதாகிருஷ்ணன் குழு, 1964 இல் கோத்தாரி குழு உள்ளிட்டவை துணைவேந்தர்களுக்கான கல்வி தகுதி, ஆளுமை திறன் போன்றவற்றை பரிந்துரை செய்துள்ளன. அவற்றை எல்லாம் நீக்கி விட்டு இந்துத்துவ செயல் திட்டங்களுக்கு ஆதரவானவர்களை துணைவேந்தர்களாக நியமனம் செய்வதற்கு யுஜிசி முயற்சிப்பது கடும் கண்டனத்திற்கு உரியதாகும்.

மாநில உரிமைகளைப்பறித்து, ஆளுநர்களுக்கு வானளாவிய அதிகாரங்களை வழங்குவதும், பல்கலைக் கழகங்கள் போன்ற உயர்கல்வி நிறுவனங்களை மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்து நேரடியாக யுஜிசி மூலம் ஒன்றிய அரசே அதிகாரங்களை எடுத்துக் கொள்வதும், கூட்டாட்சிக் கோட்பாட்டை சிதைப்பதுடன் மாநில உரிமைகள் மீது நடத்தப்படுகிற அப்பட்டமான தாக்குதலாகும். பல்கலைக் கழகங்களை, கல்லூரிகளை நிர்வகிக்கும் பொறுப்பும் கடமையும் மாநில அரசுகளுக்குத்தான் முகாமையானதாக இருக்கிறது.

இந்நிலையில் யுஜிசி தன்னாட்சி அமைப்பை பயன் படுத்தி மாநிலங்களின் உரிமைகளை நசுக்குவதை ஏற்க முடியாது. ஒன்றிய அரசு உடனடியாக யுஜிசி விதிமுறைகள் திருத்த வரைவு அறிக்கையை திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை நேர்மையாக நடத்த வேண்டும்: அண்ணாமலை

சென்னை, ஜன.9



வெளிமாநில அதிகாரிகளை கொண்டு ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலை நடத்த வேண்டும் என தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு கோரிக்கை வைக்கவிருப்பதாக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: கடந்த முறை ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலின்போது திமுகவினர் ஜனநாயகத்தை புதைகுழியில் புதைத்தனர். அப்படி இல்லாமல் இந்த முறை நியாயமாக அரசமைப்புச் சட்டப்படி தேர்தலை நடத்துவார்கள் என நம்புகிறோம். கூட்டணித் தலைவர்களிடம் பேசி இடைத்தேர்தலில் பாஜகவின் அணுகுமுறை தொடர்பாக அறிவிக்கிறோம்.

கடந்த முறை தேர்தல் அதிகாரிகள் சரியாக வேலை செய்யவில்லை. இதனால் வெளியில் இருந்து சிறப்பு அதிகாரிகளை அனுப்பி அவர்கள் மூலம் தேர்தலை நடத்த வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு கோரிக்கை வைக்கவிருக்கிறோம். திமுகவின் படைபலத்தின் கொட்டத்தை அடக்க வேண்டுமானால் தேர்தல் ஆணையம் நேர்மையாக செயல்பட வேண்டும்.

தனது பிறந்தநாளையொட்டி ஒட்டப்பட்ட போஸ்டரால் கனிமொழி பிரச்சினையில் சிக்கியுள்ளார். அதில் இருந்து விடுபடவே ஆளுநர் குறித்து கனிமொழி விமர்சிக்கிறார். அண்ணா பல்கலைக்கழக விவகாரத்தில் இருந்து தப்ப முதல்வர் ஆளுநரை பயன்படுத்துகிறார்.

இதுபோல் ஒவ்வொரு அரசியல் கட்சியினரும் பிரச்சினையில் இருந்து தப்பிக்க ஆளுநரை பகடைகாயாக பயன்படுத்துகின்றனர். அறிவிக்கப்படாத அவசர நிலை இருப்பதாக கம்யூனிஸ்ட் கட்சியினர் கூறியதை நான் மீண்டும் நினைவு ருகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மானாமதுரை சீனி ஆசான் சிலம்ப பள்ளி மாணவர்கள் மூன்றாவது முறையாக சாதனை




மானாமதுரை ஜன.9

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை மூலம் நடத்திய சிவகங்கை மாவட்ட அளவிலான சிலம்ப போட்டியில் மானாமதுரை சீனி ஆசான் சிலம்ப பள்ளியை சார்ந்த மாணவ மாணவிகள் கலந்து கொண்டு ஒற்றை கம்பு தனித் திறன் 14 வயதுக்கு உள்பட்ட பிரிவில் தக்ஷித் முதலாம் இடமும், பாண்டி மீனாள், விசாக முத்ரா மூன்றாம் இடங்களையும், 17 வயது பிரிவில் ஒற்றை கம்பு தனித்திறன் போட்டியில் ராஜேஷ் முதல் இடமும், இரட்டை கம்பு பிரிவில் ரித்திஷ் முதல் இடமும், 14 வயது பெண்கள் பிரிவில் ரோஷினி முதல் இடமும், ஆகாஷ் இரண்டாம் இடமும், புகழேஷ் மற்றும் விசாலி மூன்றாம் இடமும் பெற்றுள்ளனர்.

அதேபோல் 17 வயது கம்பு சண்டை பிரிவில் ஷெரான் ராஜ் மூன்றாம் இடமும் வென்று தொடர்ந்து மூன்றாவது வருடமாக சாதனை சாதனை படைத்துள்ளனர்.வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை சீனி ஆசான் சிலம்ப பள்ளி பயிற்சியாளர்கள் செல்வம், முனியாண்டி ஆகியோரை பொதுமக்களும் பெற்றோர்களும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் வேலை தேடும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம்



சிவகங்கை ஜன.9

சிவகங்கை மாவட்டம் வேலைநாடும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில், வருகின்ற 10.01.2025 அன்று, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தகவல் தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் இரண்டாம் அல்லது மூன்றாம் வெள்ளிக் கிழமையன்று சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. அதன்படி, வருகின்ற 10.01.2025 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.30 மணி அளவில் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில், வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான ஆட்களை தேர்வு செய்து கொள்ளலாம். சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த வேலை நாடுநர்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

மேலும், இம்முகாமில் இலவச திறன் பயிற்சிக்கான விண்ணப்பபடிவம், போட்டித் தேர்வுகளுக்கான இலவசப்பயிற்சி வகுப்பில் மாணவர் சேர்க்கை, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை பெறுவதற்கான விண்ணப்ப படிவம் ஆகியவையும் வழங்கப்படும். எனவே, விருப்பமுள்ளவர்கள் பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை மற்றும் ஐ.டி.ஐ, டிப்ளமோ படித்த இளைஞர்கள் தங்களது கல்விச் சான்று, குடும்ப அட்டை, வேலை வாய்ப்பு அடையாள அட்டை, ஆதார் அட்டையுடன் இம்முகாமில் கலந்து கொண்டு பயன் பெறலாம். இம்முகாமில் பணி வாய்ப்பு பெறுவோருக்கு பதிவு மூப்பு ஏதும் ரத்து செய்யப் படமாட்டது. எனவே வேலை நாடுநர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

# பல்லாவரம் பகுதி கிளை நிர்வாகிகளின் புதிய உறுப்பினர்கள் சேர்க்கைகான ஆலோசனை கூட்டம்



தாம்பரம் ஜன.9

கோயில் பணியாளர்களை முழு நேர அரசு ஊழியராக்க வேண்டும் என்று திருக்கோயில் யூனியனின் சென்னை கோட்டம் தாம்பரம் பல்லாவரம் பகுதி கிளை நிர்வாகிகளின் புதிய உறுப்பினர்கள் சேர்க்கைகான ஆலோசனை கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பல்லாவரம் பகுதி கிளை நிர்வாகிகளின் புதிய உறுப்பினர்கள் சேர்க்கைகான ஆலோசனை கூட்டம்த்தில் தமிழ்நாடு திருக்கோயில் தொழிலாளர்கள் யூனியன் சென்னை கோட்டம் நிர்வாகத்தில் உறுப்பினர் சேர்க்கைக்கான தாம்பரம் பல்லாவரம் பகுதி கிளை நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கிளைச் செயலாளர் ராகவ பட்டாச்சாரி தலைமையில் கிளை தலைவர் மாடம்பாக்கம் சம்பத் முன்னிலையில் நேற்று மதியம் தாம்பரம் ரயில் நிலையம் அருகே உள்ள அருள்மிகு செல்வ விநாயகர் மற்றும் கோதண்ட ராமர் திருக்கோயில் வளாகத்தில் கிளையின் மகளிர் அணி செயலாளரும் தமிழகத்தின் முதல் பெண் ஓதுவாருமான சு.சுஹஞ்சனா இறை வணக்கத்துடன் கூட்டம் நடைபெற்றது.


இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாநில மகளிர் அணி செயலாளர் எஸ்.செந்தமிழ் செல்வி கலந்துகொண்டு இக்கூட்டத்தினை துவக்கி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார்.

மேலும் இக்கூட்டத்தில் சென்னை கோட்டத்தின் செயல் தலைவர் எஸ். கீர்த்திவாசன் குருக்கள், சென்னை கோட்ட தலைவர் எஸ்.தனசேகர், செயலாளர் தாம்பரம் இரா. இரமேஷ், பொருளாளர் க.வெங்கடேசன், அமைப்பாளர் எஸ்.சிவகாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மணப்பாறையில் நியாய விலை கடையில் பணி வாங்கித் தருவதாக பெண்ணிடம் மோசடி








திருச்சி, ஜன.9

திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை சட்டமன்றத் தொகுதி உட்பட மருதாபுரி வளநாடு பகுதியை சேர்ந்த அப்பதுல் ரகுமான் என்பவர் பிராம்பட்டி ஊராட்சியை சேர்ந்த பெண் ஒருவருக்கு நியாய விலை கடையில் பணி வாங்கித் தருவதாகவும் இதற்காக மணப்பாறை சட்டமன்ற உறுப்பினரிடம் பரிந்துரை செய்வதாக கூறி 9,00,00 லட்சம் ரூபாய் பேரம் பேசி உள்ளார்.

இறுதியாக ஆறு லட்சத்திற்கு பேரம் பேசி இரண்டு தவணையாக மூன்று லட்ச ரூபாய் கொடுத்துள்ளனர் இறுதியாக மூன்று லட்சமாக பணம் வாங்கியதற்கான வீடியோ வெளியாகி உள்ளது. இது குறித்து உறுப்பினர் ப.அப்துல் சமது(திமுக) சார்பில் தெரிவிக்கையில் நான் யாருக்கும் பரிந்துரை செய்யவில்லை எனவும் எனது பெயரை மோசடியாக பயன்படுத்தி பணம் வாங்கியதாக எம்எல்ஏ தரப்பில் குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் பணம் வாங்கியவர் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாக கூறப்படுகிறது. இது குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான அதிமுக நிர்வாகி கட்சியிலிருந்து நீக்கம்: இபிஎஸ்




சென்னை, ஜன.9

அண்ணா நகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்ட அதிமுக வட்டச் செயலாளர் சுதாகரை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார். இதனிடையே, சென்னை அண்ணா நகர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ராஜியை பணியிடை நீக்கம் செய்து சென்னை காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை அண்ணா நகரைச் சேர்ந்த சிறுமி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இந்நிலையில், சிறுமி பாலியல் வன்கொடுமை தொடர்பாக, அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வழக்குப்பதிவு செய்து அண்ணா நகர் பகுதியைச் சேர்ந்த அதிமுக வட்டச் செயலாளர் சுதகார் என்பவரை நேற்று (ஜன.7) கைது செய்தனர்.

இந்நிலையில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "கட்சிக்கு களங்கமும், அவப் பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினால், தென் சென்னை வடக்கு (மேற்கு) மாவட்டம், அண்ணாநகர் மேற்கு பகுதியைச் சேர்ந்த 103 வடக்கு வட்டக் கழகச் செயலாளர் ப. சுதாகர், இன்று முதல் அதிமுகவின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார். கட்சித் தொண்டர்கள் யாரும் இவருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது" என்று அவர் கூறியுள்ளார்.

மேலும் இந்த வழக்கில் அண்ணா நகர், அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ராஜியை, பணியிடை நீக்கம் செய்து காவல்துறை ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

# கீரப்பாக்கம் ஊராட்சியில் முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு நிதியிலிருந்து தார்சாலை அமைத்து தர மாவட்ட கலெக்டருக்கு பொதுமக்கள் கோரிக்கை



கூடுவாஞ்சேரி, ஜன.9

செங்கல்பட்டு மாவட்டம் கீரப்பாக்கம் ஊராட்சியில் தார்சாலையே பார்க்காத அடித்தட்டு மக்களுக்கு முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு நிதியிலிருந்து தார்சாலை அமைத்து தரக்கோரி மாவட்ட கலெக்டருக்கு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கீரப்பாக்கம் ஊராட்சியில், கீரப்பாக்கம், முருகமங்கலம், பெரிய அருங்கால் மற்றும் சின்ன அருங்கால் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில், கீரப்பாக்கம் ஊராட்சியில் தார்சாலையே பார்க்காத அடித்தட்டு மக்களுக்கு முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு நிதியிலிருந்து தார்சாலை அமைத்து தரக்கோரி மாவட்ட கலெக்டருக்கு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அருன் ராஜிக்கு கீழப்பாக்கம் ஊராட்சியில் உள்ள பொது மக்கள் விடுத்துள்ள கோரிக்கை மனுவில் கூறுகையில், கீரப்பாக்கம் ஊராட்சிக்குட்பட்ட 4 மற்றும் 5வது வார்டில் 70 இருளர் குடும்பத்தினரும், இதேபோல் 300க்கும் மேற்பட்ட கல்லுடைக்கும் ஏழை தொழிலாளர் குடும்பத்தினரும் கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருகின்றனர். இதில் 3, 4 மற்றும் 5வது வார்டு பகுதிகளை இணைக்க கூடிய பெருமாள் கோயில் தெரு முதல் விநாயகபுரம் தொட்டி மாரியம்மன் கோவில் தெரு வழியாக ஊமை மாரியம்மன் கோவில் தெரு வரை உள்ள 6 மீட்டர் அகலமும், ஒரு கிலோ மீட்டர் நீளமும் கொண்ட விநாயகபுரம் பிரதான மண் சாலை கடந்த பல ஆண்டுகளாக குண்டும் குழியுமாக காட்சியளித்து வருகிறது.

மேலும் வெயில் காலங்களில் புழுதி நிறைந்த சாலையாகவும், மழை காலங்களில் சேறும் சகதியுமாகவும் அலங்கோல நிலையில் காட்சி அளித்து வருகிறது. இதில் மேற்படி சாலையை தார் சாலையாக சீரமைத்து தரும்படி பொது மக்கள் சார்பில் வலியுறுத்தியதின் பேரில் கிராம சபை கூட்டங்களில் ஊராட்சி மன்றத்தின் சார்பில் பலமுறை தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் மேற்படி கீரப்பாக்கம் ஊராட்சியில் உள்ள விநாயகபுரம் பிரதான சாலையை தார் சாலையாக சீரமைக்க போதிய நிதி ஆதாரம் இல்லாததால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாமல் ஊராட்சி நிர்வாகம் திணறி வருகிறது. இதனால் மாணவர்கள், கர்ப்பிணி பெண்கள், நோயாளிகள், அன்றாடம் கூலி வேலைக்கு சென்று வருவார் என அனைத்து தரப்பு பொதுமக்களும் அவதிப்பட்டு வருகின்றனர். எனவே இதுவரை தார் சாலையே பார்க்காத மேற்படி பகுதிகளில் வாழும் அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் விநாயகபுரம் பிரதான சாலையை முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு நிதியின் கீழ் தார் சாலையாக அமைத்து தர செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் தலையிட்டு போர்க்கால அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

# தென்காசி வேலைவாய்ப்பு -தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்




தென்காசி ஜன.9

தென்காசி மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கதவு எண்.168, முகமதியா நகர் (எபினேசர் டைல்ஸ் அருகில் . ரிதிசி. பின்புறம்), குத்துக்கல் வலசை, இலத்தூர் அஞ்சல் என்ற முகவரியில் 30.01.2023 முதல் செயல்பட்டு வருகிறது. தென்காசி மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் வருகின்ற 10.01.2025 அன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை அலுவலக வளாகத்தில் நடைபெற இருக்கிறது. இம்முகாமில் Gene-arth Services, Tvs Training Services உட்பட பல்வேறு தனியார்துறை முன்னணி நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்ய உள்ளனர். இம்முகாமில் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி முதல் பட்டப்படிப்பு மற்றும் ஐ.டி.ஐ டிப்ளமோ ஆகிய கல்வித் தகுதி உடைய தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த வேலை நாடுநர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இம்முகாமில் கலந்துகொள்ள விரும்பும் வேலைநாடுநர்கள் www.tnprivatejobs.tn.gov.in என்ற வலைதளத்தில் Candidate Log-in ல் பதிவு செய்ய வேண்டும்

இம்முகாமில் கலந்துகொள்ள விரும்பும் தனியார்துறை நிறுவனங்கள் www.tnprivatejobs.tn.gov.in என்ற வலைதளத்தில் Employer Login ல் பதிவு செய்ய வேண்டும். இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மூலம் பணிநியமனம் பெற்றவர்களது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு எவ்விதத்திலும் பாதிக்கப்படாது.

மேலும் விபரங்களுக்கு தென்காசி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது deotksjob-fair@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி வாயிலாகவோ, 04633213179 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

# கல்லல் விஷ்ராம் கல்வி அறிவாலயம் சார்பாக விருது வழங்கும் விழா



கல்லல் ஜன.9

சிவகங்கை மாவட்டம் கல்லல் விஷராம் கல்வி அறிவாலயம் சார்பாக பல்வேறு துறைகளில் சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி கல்லலில் நடைபெற்றது.

கல்லலில் செயல்பட்டு வரும் இந்த அமைப்பானது ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு துறைகளில் சிறப்பாக தங்களுடைய பங்களிப்பைக் கொடுக்கும் நிறுவனங்களையும், தனி நபர்களையும் பாராட்டி விருது வழங்கி கௌரவித்து வருகிறது.

இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழாவில் சிறந்த சமூகப் பணி ஆற்றி வரும் மாலை தந்தி நாளிதழுக்கு " சிறந்த சமூகப் பணி விருது " வழங்கப்பட்டது. அவ்விருதை அந்நாளிதழின் நிறுவனர், ஆசிரியர், வெளியீட்டாளர் பொன்ராஜ் மற்றும் இணை ஆசிரியர் சந்திர குமார் இணைந்து பெற்றுக் கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் தூதை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் ரகுநாதன் மற்றும் கௌரிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் முருகன் ஆகியோருக்கு "மதிப்பு மிகு ஆசிரியர்" விருது வழங்கப்பட்டது. கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாக பணியாற்றி வரும் கல்லல் கிளை நூலகர் வசந்த செல்வி மற்றும் கல்லல் சுற்றுப்புற பகுதிகளில் சிறப்பாக செவிலியர் சேவையாற்றி வரும் சுப்புலட்சுமி கிருஷ்ணன் ஆகியோருக்கு "புதுமைப் பெண்" விருது வழங்கப்பட்டது.

கல்லலில் மிகச்சிறப்பாக செயல்பட்டு இசேவை உள்ளிட்ட பணிகளை மக்களுக்கு அளித்து வரும் கல்லல் " பர்ஸ்ட் லுக் ஸ்டுடியோ" நிறுவனத்திற்கு "சிறந்த மக்கள் பணி விருது" வழங்கப்பட்டது. அதை அந்த நிறுவனத்தின் உரிமையாளர் ஜான் பிரகாஷ் பெற்றுக் கொண்டார். மாணவர்களிடமும், பொதுமக்களிடமும் திருக்குறள் பற்றிய விழிப்புணர்வை தொடர்ந்து ஏற்படுத்தி வரும் கல்லலைச் சேர்ந்த தன்னார்வலர் முத்தையா "திருக்குறள் தூதர்" விருது பெற்றார்.

சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் செந்தில்நாதன் விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு அனைவருக் கும் விருதுகளை வழங்கினார். இவ்விழாவில் சிவகங்கை கவுன்சிலர் ராஜா, சிவகங்கை ஒன்றிய செயலாளர் செல்வமணி, நடராஜபுரம் சொசைட்டி முன்னாள் தலைவர் சேவியர் தாஸ், தேவபட்டு ஊராட்சித் தலைவர் கரு. செந்தில் குமார், எழுத்தாளர் மகாபிரபு, முத்து டான்ஸ் அகாடமி நிறுவனர் முத்துமாரி இளஞ்செழியன், நாகரத்தினம், நித்யா தொழில் முனைவோர் அமலன், ஜேசுதாஸ், புலவர் காளிராசா, புலவர் மெய்யாண்டவர், ஆசிரியர்கள் தனுசு ஸ்டாலின், துஷ்யந்த் சரவணராஜ், வனிதா, நாகரத்தினம், நித்யா, கற்பகவல்லி, உமாராணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் சமீபத்தில் மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. முன்னதாக கல்லல் முத்து டான்ஸ் அகாடமி மாணவிகளின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

# திருப்புவனம் அருகே தகராறு முதியவர் குத்திக் கொலை



சிவகங்கை, ஜன.9

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகில் காஞ்சிரங்குளம் கிராமத்தைச்சேர்ந்த கேசவன் மகன் கருப்பையா என்பவருக்கும் முருகன் வீட்டிற்கும் வாய் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதில் ஆத்திரமடைந்த முருகன் மகன் சக்தி கணேஷ் என்பவர் கருப்பையாவை கூர்மையான ஆயுதத்தால் சரமாரியாக வயிற்றில் குத்தியதால் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

கருப்பையா மரணம் குறித்து மானாமதுரை உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் நிரேஷ் தலைமையில் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



மதுரை மாநகர் தெற்கு காவல்துணை ஆணையராக இனிக்கோ திவ்யன் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.

# மதுரை அப்போலோ மருத்துவமனை மிகவும் அரிதான ABO இணக்கமற்ற சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து சாதனை

மதுரை, ஜன.9

மதுரை அப்போலோ மருத்துவமனை மருத்துவ துறையில் மற்றுமொரு முக்கிய மைல்கல்லாக மிகவும் அரிதான எபிஓ இணக்கமற்ற சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து சாதனை படைத்துள்ளது. மதுரையை சேர்ந்த 47 வயது மதிக்கத்தக்க ஆண் நீரிழிவுநோய், இரத்த அழுத்தம் மற்றும் நாள்பட்ட சிறுநீரக கோளாறால் பாதிக்கப்பட்ட நிலையில் மதுரை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். தீவிர பரிசோதனைக்கு பிறகு அவரின் உடல்நிலையை கருதி அவருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய மருத்துவ குழு பரிந்துரைத்தது.



'O' இரத்த பிரிவை உடைய அந்த நபருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கான சிறுநீரகம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து, நீண்ட ஆலோசனைக்கு பிறகு எபிஓ இணக்கமற்ற சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்யப்பட்டது. பொருந்தாத மாற்று இரத்த பிரிவை கொண்ட நபரிடம் இருந்து சிறுநீரகத்தை பெற்று சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படும் முறைதான் இந்த எபிஓ இணக்கமற்ற சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை. பொதுவாக சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு குடும்பத்தினரில் உள்ள இணக்கமான இரத்த பிரிவை கொண்ட நபரிடம் இருந்தோ அல்லது மூளை சாவு அடைந்த நபரிடம் இருந்து உறுப்பு தானம் பெற்று அறுவை சிகிச்சை செய்யப்படும். சில நேரங்களில் இது போன்ற வாய்ப்புகள் அமையாத பட்சத்தில் மிகவும் அரிதான எபிஓ இணக்கமற்ற சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொள்வார்கள். அதன்படி சிறுநீரக பாதிப்பு ஏற்பட்ட ஆணின் ('O' Blood Group) 37 வயதான 'B' இரத்த பிரிவு கொண்ட அவரது மனைவியின் சிறுநீரகத்தை பொருத்த முடிவு செய்யப்பட்டது.

இந்த அறுவை சிகிச்சையின் வெற்றியைக் குறித்து மதுரை அப்போலோ மருத்துவமனையின் சிறுநீரகவியல் நிபுணர் டாக்டர் பி. அருண் பிரசாத் கூறியதாவது, "ABO இணக்கமற்ற சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மிகுந்த சிக்கலான சிகிச்சையாகும், இதில் துல்லியமான திட்டமிடலும் பிரத்யேகமான மருத்துவ செயல்பாடுகளும் தேவைப்படுகிறது. இந்த அறுவை சிகிச்சையை மேற்கொள்ள சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நபர் சிறுநீரக மாற்றத்திற்கு முன் இம்முனோசப்ரெஸ்ஸண்ட் எனப்படும் நோயெதிர்ப்பு சக்தியின் அமைப்பை குறைத்து ஆன்டிபாடி நீக்கம் என்கிற பிளாஸ்மா பெரிசிஸ் மற்றும் நோய் எதிர்ப்பு மருந்துகளுடன் கூடிய ஒரு சிறப்பு சிகிச்சை முறையை எதிர்கொண்டார். இதனை தொடர்ந்து டிசம்பர் 18ஆம் தேதி அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நிறைவேறியது. அறுவைசிகிச்சைக்கு பின் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நபரும் நன்கொடையாளருமான அவரதுமனைவியும் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்ட பிறகு டிசம்பர் 26ஆம் தேதி இருவரும் நலமுடன் வீடு திரும்பினார்."

செய்தியாளர்கள் சந்திப்பில் பி. நீலகண்ணன் அப்போலோ மருத்துவமனையின் மதுரை மண்டல முதன்மை செயல் அதிகாரி, டாக்டர் கே. பிரவீன் ராஜன், சிறுநீரகவியல் சிகிச்சை நிபுணர் டாக்டர் பி. அருண் பிரசாத் ஆகியோருடன் சிறுநீரகவியல் சிகிச்சை நிபுணர் டாக்டர் சரவணன், சிறுநீரகவியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர் ஜே. அருண் குமார், டாக்டர் கே. சங்கர், டாக்டர். அழகப்பன், மூத்த இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் வி. ஸ்ரீதர், மயக்கவியல் நிபுணர்கள் டாக்டர் அப்துல் காதர், டாக்டர். சுப்பையா, தீவிர சிகிச்சை பிரிவு நிபுணர் டாக்டர் சி.ஐயப்பன், இரத்த வங்கிநோயியல் நிபுணர் டாக்டர் எம். இந்து, மார்க்கெட்டிங்பொது மேலாளர் கே. மணி கண்டன், நிர்வாக துணை பொது மேலாளர் லாவண்யா மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை ஒருங்கிணைப்பாளர் பூமுருகன் ஆகியோர் பங்கேற்றனர்.

# மதுரை பள்ளிகளில் போதை பொருளுக்கு எதிரான அமைப்பு தொடக்கம்




மதுரை, ஜன.9

மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் உத்தரவுப்படி, மதுரை மாநகர மதுவிலக்கு அமலாக்க பிரிவு சார்பாக மதுரை, கோ.புதூர் EBG. மெட்ரிக்குலேஷன் மேல் நிலைப் பள்ளி மற்றும் CSI கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் போதை பொருளுக்கு எதிரான மன்றங்கள் (ANTI DRUG CLUB) ஆரம்பிக்கப்பட்டன.

இதன் மூலம், மாணவமாணவியர்களுக்கு இடையே போதைப் பொருள்களினால் ஏற்படும் தீமைகள் பற்றியும் போதைக்கு பயன்படுத்தப்படும் மாத்திரைகள் பற்றியும் போதைப் பொருள் புழக்கம் மற்றும் பழக்கம் பரவாமல் தடுக்க மாணவர்களால் காவல் துறைக்கு உதவ முடியும் என்பது பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இவ்விழாவில் பள்ளி மற்றும் கல்லூரி முதல்வர்கள், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல்துறையினர், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெறும் கலைஞரின் கனவு இல்ல திட்ட வளர்ச்சி பணிகளை ஆட்சியர் ஆய்வு

கன்னியாகுமரி ஜன.9

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை ஊராட்சி ஒன்றியம், ஈசாந்தி மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு. செய்தியாளர்களிடையே தெரிவிக்கையில்:



தமிழ்நாடு முதலமைச்சர் கன்னியாகுமரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டப்பணிகளுக்கு நிதிஒதுக்கீடு செய்து, வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் தோவாளை ஊராட்சி ஒன்றியம், ஈசாந்தி மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் தலா ரூ.3.10 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் 3 வீட்டுகளின் கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் புதிதாக கட்டப்பட்டுள்ள வீடுகளின் கட்டமைப்புகள், அடிப்படை வசதிகள். கட்டுமான பணிகளின் தரம் உள்ளிட்டவைகள் ஆய்வு மேற்கொண்டதோடு. கட்டுமான பணிகள் தொய்வின்றி நடைபெற பயனாளிகளுக்கு தேவையான சிமெண்ட், கம்பிகள் கொடுக்க துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தபட்டது. தொடர்ந்து கோமதி நாயகம். மேற்கொண்டு பணிகளை தொடர தேவையான வங்கி கடனுதவி பெற்று வழங்கிட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் பணிபுரியும் இரண்டு பணியாளர்கள் தங்களுக்கான பணி நாட்கள் முடித்துவிட்டது. எனவே தங்களுக்கு பணி நாட்களை நீடித்து தரும்படி கோரிக்கை வைத்தார்கள். அவர்களின் கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளபடும் என தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வுகளில் உதவி திட்ட அலுவலர் கார்த்திகேயன், உதவி பொறியாளர் .ஹெலன் ராஜபாய், ஊராட்சி செயலர் .ராஜா, மேற்பார்வையாளர்கள். அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# தேவதானப்பட்டி அருகே ராசிமலையில் மக்கள் தொடர்பு முகாம்

பெரியகுளம். ஜன.9

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே தேவதானப்பட்டியில் உள்ள ராசிமலை எனும் மலை கிராமத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சியர் ஆர்.வி. ஷஜீவனா இ.ஆ.ப தலைமையில் நடைபெற்றது.



இந்த மக்கள் தொடர்பு முகாமில் வருவாய்த்துறை, மாற்றுத்திறாளாளிகள் நலத்துறை, மருத்துவத்துறை, மகளிர் உரிமை துறை, தோட்டக்கலைத்துறை, மகளிர் திட்டம் உள்ளிட்ட துறைகளிலிருந்து சுமார் 2 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கினர். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, சப் கலெக்டர் ரஜத் பீடன், பெரியகுளம் தாசில்தார் மருதுபாண்டி, வட்ட வழங்கல் அலுவலர் வளர்மதி, தேவதானப்பட்டி வருவாய் ஆய்வாளர் தமிழ்செல்வி, வட்ட வழங்கல் (தனி) வருவாய் ஆய்வாளர் இசக்கி குமார், கிராம நிர்வாக அலுவலர்கள் செல்வகுமார், குமார், பாஸ்கரன், தங்கமுத்து உள்ளிட்ட அரசு அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி அழகப்பபுரம் பகுதியில் சிறப்பு மக்கள் தொடர்பு முகாம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய வருவாய் அலுவலர்

கன்னியாகுமரி ஜன.9

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் அகதீஸ்வரம் வட்டம், அழகப்பபுரம் புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி கலையரங்கில் நேற்று நடைபெற்ற சிறப்பு மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம் கலந்துகொண்டு பொதுமக்களின் பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று தகுதியான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசுகையில்:



தமிழ்நாடு அரசு பொதுமக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் மாவட்டத்திற்குட்பட்ட ஒவ்வொரு வருவாய் கிராமங்களிலும் சிறப்பு மக்கள் தொடர்பு முகாம் நடத்தி பொதுமக்களின் பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று தகுதியான பயனாளிகளுக்கு உடனடியாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இம்முகாமின் நோக்கம் அரசின் அனைத்து திட்டங்களும் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதேயாகும். இத்திட்டத்தில் அனைத்து துறைகளும் இணைந்து செயல்படுகிறது.

அதனடிப்படையில் அழகப்பபுரம் புனித அந்தோணியார் மேல் நிலைப்பள்ளி கலையரங்கில் சிறப்பு மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டு அரசு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பட்டா வழங்குதல், பட்டா பெயர் மாற்றம் செய்தல், விதவை சான்றிதழ், முதிர்கன்னி ஓய்வூதியத் தொகை, ஆதரவற்றோர் விதவை சான்றிதழ், குடும்ப அட்டை, சாலை, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்வதே ஆகும். வீடு தொடர்பான மனுக்களுக்கு மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் மூலம் தகுதியான பயனாளிகளுக்கு மானியத்துடன் வீடுகள் கட்டி கொடுக்கப்படும். இம்முகாமின் நோக்கம், அரசின் அனைத்து திட்டங்களும் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதேயாகும். இத்திட்டத்தில் அனைத்து துறைகளும் இணைந்து செயல்படுகிறது. எனவே பொதுமக்களாகிய நீங்கள் அனைவரும் அரசின் திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் குறித்து உரிய துறைகளுக்கு விண்ணப்பித்து, பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பால சுப்பிரமணியம் தெரிவித்தார்.

முன்னதாக மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பால சுப்பிரமணியம் பள்ளிவளாகத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறை, கால்நடை பராமரிப்பு துறை, மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், சமூகநலத்துறை துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த பல்துறை பணிவிளக்க கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.

நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கனகராஜ், இணை இயக்குநர்கள் ஆல்பர்ட் ராபின்சன் (வேளாண்மைத்துறை), மரு.இராதாகிருஷ்ணன் (கால்நடை பராமரிப்பு துறை), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஜெங்கின் பிரபாகர், துணை இயக்குநர்கள் ஷீலா ஜாண் (தோட்டக்கலைத்துறை), கீதா (வேளாண் விற்பனை), மாவட்ட சமூகநல அலுவலர் விஜயமீனா, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் முருகன், அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# பேர்ணாம்பட்டு அரிமா சங்கம் சார்பில் அரசு பள்ளிக்கு ரூ.20 ஆயிரம் மதிப்புள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கல்

வேலூர் ஜன.9

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு தாலுகா, பெரியதாமல் செருவு அரசு நடுநிலைப் பள்ளிக்கு பேர்ணாம்பட்டு அரிமா சங்கம் சார்பில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (ஆர்ஓ) வழங்கும் நிகழ்ச்சி திங்கள் கிழமை பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.




நிகழ்ச்சிக்கு, பள்ளி தலைமையாசிரியர் ஆர்.சாவித்திரி தலைமை தாங்கினார். உதவி ஆசிரியர் இ.ஹரிஹரன் அனைவரையும் வரவேற்றார். பள்ளி ஆசிரியர் வி.செல்வராஜ், ஆசிரியை கே.மான்விழி, அரிமா சங்க உடனடி முன்னாள் தலைவர் டாக்டர். பிலால் நத்தார், இயக்குநர் ஜெ. தமிழரசன், செயல் பொருளாளர் கே.பிச்சை முத்து, முதல் துணை தலைவர் முஹம்மத் இம்ரான், துணைச் செயலாளர் பல்லல குப்பம் கே.மனோஜ்குமார், சேவை தலைவர் ஏ.சுபாகரன் ஆகியோர் முன்னிலை வகித் தனர்.

பேர்ணாம்பட்டு அரிமா சங்க தலைவர் கோ.பரிதா புருஷோத்தமன் 195 பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் சுமார் ரூ.20 ஆயிரம் மதிப்புள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை பள்ளிதலைமை ஆசிரியரிடம் வழங்கினர். இந்நிகழ்வில், பள்ளி ஆசிரியர்கள் ஜெ.சக்தி, ஜி.நந்தினி, கணினி ஆசிரியை ஷாலினி, அரிமா சங்க நிர்வாகிகள் பாடகர் குமார், முகாம் ஒருங்கி ணைப்பாளர் இளைய ராஜா, மக்கள் மற்றும் செய்தி தொடர்பு கே.அரவிந்த், சம்பத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் கல்லல் ஒன்றியம் தேவப்பட்டு ரயில் தண்டவாளம் அருகில் அடையாளம் தெரியாத ஆண் பிணம் ஒன்று கிடப்பதாக காரைக்குடி வட்டாட்சியர் உனக்கு நேற்று தகவல் கிடைத்தது அதன் அடிப்படையில் 45வயதுமிக்க ஆண்நபர் ரயிலில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.காரைக்குடி ரயில்வே போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு உடலை கைப்பற்றி உடற்கூறாய்விற்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

# வேலூரில் போக்குவரத்து துறை சார்பில் வாகன ஓட்டிகள் பொதுமக்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு!!

வேலூர் ஜன.9

வேலூர் மாவட்டம், வேலூரில், வேலூர் கோட்ட போக்குவரத்து துறை மற்றும் தீயணைப்பு துறை மற்றும் தீயணைப்பு மீட்பு பணி சார்பில் வாகன ஓட்டிகளுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் சாலை பாதுகாப்பு மாதம் மாதம் என்ற தலைப்பில் விழிப்புணர்வு, வேலூர் வட்டார போக்குவரத்து துறை பிரேக்கிங் இன்ஸ்பெக்டர் மாணிக்கம் தலைமையில் நடத்தப்பட்டது.




தீயணைப்பு மற்றும் மீட்பு பணி வேலூர் நிலைய அலுவலர், துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் பொதுமக்கள் என பலர் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்த சாலை பாதுகாப்பு விழிப்புணர்வில் சாலைகளில் வாகனத்தில் தீப்பிடித்தால் சாதாரணமாக எப்படி அனைப்பது உள்ளே உள்ளவர்களை எப்படி காப்பாற்றுவது குறித்தும், இதனை தொடர்ந்து பல்வேறு சாலை பாதுகாப்பு குறித்த அறிய அவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மாலை தந்தி



# தேவகோட்டை வட்டத்திற்குட்பட்ட கல்லங்குடி கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாமில் 108 பயனாளிகளுக்கு ரூ.08.26 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கல்

தேவகோட்டை ஜன.9

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், தேவகோட்டை உள்வட்டம், கல்லங்குடி கிராமத்தில், நேற்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை, வழங்கி தெரிவிக்கையில்,

உயர்கல்விக்கென அரசால் தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம் போன்ற திட்டங்கள் வாயிலாக மாதந்தோறும் ரூ.1,000/ உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. உயர்கல்வி கற்பதன் அடிப்படையில், வேலைவாய்ப்புக்களும் எளிதில் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. இதுதவிர, பல்வேறு கல்விக் கடனுதவிகளும் வழங்கிட அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில், பல்வேறு மேம்பாடு வசதிகள் மற்றும் தங்களின் தேவைகள் குறித்து பெறப்பட்டுள்ள மனுக்களில், தகுதியுடைய மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்பட்டு, அதற்குரிய பலன்கள் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்தார்.

முன்னதாக, இம்மக்கள் தொடர்பு முகாமில் அரசின் பல்வேறு துறைகள் ரீதியாக அமைக்கப்பட்டிருந்த செயல்விளக்க கண்காட்சியினை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில், 22 பயனாளிகளுக்கு தலா ரூ.30,000/ வீதம் மொத்தம் ரூ.6,60,000/ மதிப்பீட்டிலான இலவச வீட்டுமனைப்பாட்டாக்கான ஆணைகளையும், 14 பயனாளிகளுக்கு ஆதிதிராவிடர் கணினி இ பட்டாக்கான ஆணைகளையும், 17 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணைகளையும், 08 பயனாளிகளுக்கு வாரிசு சான்றுகளையும், 09 பயனாளிகளுக்கு விதவை சான்றுகளையும், 03 பயனாளிகளுக்கு சிறுகுறு விவாசாயி சான்றுகளையும், 01 பயனாளிக்கு கணவனால் கைவிடப்பட்டவருக்கான சான்றினையும், 01 பயனாளிக்கு முதல் பட்டா தாரிக்கான சான்றினையும், 01 பயனாளிக்கு இரண்டு பெண் குழந்தைகள் திட்டத்திற்கான சான்றினையும்,10 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், வேளாண்மைத் துறையின் சார்பில் 06 விவசாயிகளுக்கு ரூ.3,320/ மதிப்பீட்டிலான கேழ்வரகு விதை, ஆடாதோடா, நொச்சி கன்றுகள், மண்புழு உரப்படுக்கை ஆகிய வேளாண் இடுபொருட்களையும், 01 விவாசாயிக்கு ரூ.6,000/ மதிப்பீட்டிலான பேட்டரி தெளிப்பான்,



தோட்டக்கலைத்துறையின் சார்பில் 02 பயனாளிகளுக்கு ரூ.21,349/ மதிப்பீட்டிலான பரப்பு விரிவாக்கம் கொய்யா மற்றும் காய்கறி சாகுபடிக்கான இடுபொருட்களையும், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் 05 பயனாளிகளுக்கு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் தலா ரூ.3,000/ வீதம் மொத்தம் ரூ.15,000/ மதிப்பீட்டிலான நிதியுதவிக்கான ஆணையினையும், 05 கர்ப்பிணி தாய்மார்களுக்கு தலா ரூ.2,000/ வீதம் மொத்தம் ரூ.10,000/ மதிப்பீட்டிலான ஊட்டச்சத்து பெட்டகங்களையும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.1,01,800/ மதிப்பீட்டிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டரினையும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.2,460 மதிப்பீட்டிலான காதொலி கருவினையும், 01 மாற்றுத் திறனாளிக்கு ரூ.6,350 மதிப்பீட்டிலான தையல் இயந்திரத்தினையும் என ஆக மொத்தம் 108 பயனாளிகளுக்கு ரூ.8,26,279/ மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், வழங்கினார்.



மேலும், மாவட்டம் முழுவதும் அனைத்து பள்ளிகளிலும் ''யாவரும் கேளிர்'' திட்டத்தின் கீழ் பல்வேறு போட்டிகள் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம் கல்லங்குடி நடுநிலைப்பள்ளியில் ''யாவரும் கேளிர்'' திட்டத்தின் படி பல்வேறு பிரிவுகளின் கீழ் நடைபெற்ற ஓட்டப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவ மாணவியர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) (பொ) ஜெயமணி, இணை பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், தேவகோட்டை வட்டாட்சியர் சேதுநம்பு மற்றும் அனைத்து துறை அரசு முதல்நிலை அலுவலர்கள், பொதுமக்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சங்கரன்கோவில் வட்டம் கரிவலம்வந்தநல்லூரில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மனுநீதிநாள் முகாம்

சங்கரன்கோவில் ஜன9

தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து தரப்பு மக்களுக்கும் தமிழ்நாடு அரசின் அனைத்து திட்டங்களும் சென்றடைந்து பயனடைய வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார்கள். அதனடிப்படையில் நேற்றைய தினம் மனுநீதி நாள் முகாம் நடைபெற்று வருகிறது. இம்முகாமில் அரசுத்துறை அலுவலர்கள் அனைவரும் தங்கள் துறை சார்ந்த திட்டங்களை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் எடுத்துரைத்தார்கள். தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ள அனைத்து திட்டங்களையும் பொதுமக்கள் கேட்டறிந்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், தெரிவித்தார்.

இம்முகாமில் வருவாய்த் துறையின் மூலம் 28 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணையினையும், 38 பயனாளிகளுக்கு ரூ.19.00 இலட்சம் மதிப்பிலான வரன்முறை பட்டாக்களையும், 27 பயனாளிகளுக்கு ரூ.1.35 இலட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப்பட்டாக்களையும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு மாற்றுத் திறனாளி ஓய்வூதியத்திற்கான உதவித்தொகையினையும் (மாதம் ரூ.1500/ வாழ் நாள் முழுவதும்), வேளாண்மைத்துறை மூலம் 01 பயனாளிக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (20242025) மின்கல விசைத் தெளிப்பான் விலை ரூ4648/ இல் ரூ.2075/ மானியமும், தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் 01 பயனாளிகளுக்கு 12.5 கிலோ அங்கக உரம் ரூ.3000/ இல் ரூ.1143/ மானியமும், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் 3 லிட்டர் அங்கக திரவ உரம் ரூ.1920/ இல் மானியம் ரூ.1920/ம், தோட்டக்கலைத்துறை மூலம் 01 பயனாளிக்கு ரூ.8000/ மதிப்பிலான மிளகாய் குழித்தட்டு நாற்றுகளையும், 01 பயனாளிக்கு ரூ.8000/ மதிப்பிலான தக்காளி குழித்தட்டு நாற்றுகளையும் என மொத்தம் 99 பயனாளிகளுக்கு 03,47 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் ஏ,கே.கமல் கிஷோர் வழங்கினார்.



மனுநீதி நாள் முகாமில், தோட்டக்கலை துறை, வேளாண்மை துறை, சமூக நலத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் பல்வேறு துறைகளின் மூலம் அரசு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினையும் மாவட்ட ஆட்சியர் மற்றும் ஏராளமான பொது மக்கள் பார்வையிட்டார்கள்.

இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித் தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை போன்ற கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில். சங்கரன் கோவில் வருவாய் கோட்டாட்சியர் கவிதா, சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் லாலா சங்கர பாண்டியன், கரிவலம்வந்தநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் மாரியப்பன், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ஷேக்அயூப், சங்கரன்கோவில் வட்டாட்சியர் பரமசிவன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள். பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 6 கோடி மதிப்புள்ள பொது சொத்துக்களை மீட்க வலியுறுத்தி நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு பொதுமக்கள் மனு

கூடுவாஞ்சேரி, ஜன.9

செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ.6 கோடி மதிப்புள்ள பொது சொத்துக்களை மீட்க வலியுறுத்தி நந்திவரம்கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு பொதுமக்கள் மனு கொடுத்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம் நந்திவாரம் கூடுவாஞ்சேரி நகராட்சியில் 30 வார்டுகள் உள்ளன இங்கு ஒரு லட்சத்துக்கு மதிப்பான ஒரு வசதி வருகின்றனர். இந்நிலையில், நகராட்சிக்கு உட்பட்ட 21 வது வார்டு, டிபன்ஸ் காலனி பகுதியில் ரூ.6 கோடி மதிப்புள்ள பொது சொத்துக்களை மீட்க வலியுறுத்தி டிபன்ஸ் காலனி குடியிருப்போர் நலவாழ்வு சங்கம் சார்பில், காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய மதிமுக செயலாளர் பாரத்ராஜேந்திரன், அதிமுக 21 வது வார்டு செயலாளர் நூருல்லா ஆகியோர் தலைமையில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தை இன்று காலை 11:30 மணியளவில் முற்றுகையிட்டு நகராட்சி ஆணையர் ராணியிடம் பொதுமக்கள் மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறுகையில், டிபன்ஸ் காலனி பகுதியில் டிபன்ஸ் செவிலியன் கோ ஆபரேடிவ் சொசைட்டி மூலம் 1985 ஆம் ஆண்டு 16.96 ஏக்கர் நிலத்தில் லே அவுட் போடப்பட்டது அந்த



மனைப்பிரிவு வரைபடத்தில் பூங்கா, தண்ணீர் குளம் மற்றும் பொது இடம் ஆகியவை பொது பயன்பாட்டிற்கான ஒதுக்கப்பட்டது. அவற்றின் தற்போதைய சண்டை மதிப்பு சுமார் ரூ.6 கோடி ஆகும். மேற்கண்ட சொசைட்டியின் செயல்பாடுகள் முடிந்துவிட்ட காரணத்தால் சொசைட்டி கலைக்கப்பட்டது. பின்னர் 2005 ஆம் ஆண்டு கலைக்கப்பட்ட சொசைட்டியின் முகவரியில் போலியாக ஒரு நபர் சொசைட்டி தனி அலுவலர் என்ற போர்வையில் பொது நலத்திற்காக ஒதுக்கப்பட்ட இடங்களை தனி நபருக்கு போலியான மூலம் கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் 2005 ஆம் ஆண்டு பதிவு செய்துள்ளார்.

அவற்றை பல மனைகளாக பிரித்தும் விற்பனை செய்துள்ளார். மேலும் போலியாக பதிவு செய்த ஆவணங்களை கொண்டு வருவாய் துறையினர் பட்டா வழங்கி உள்ளனர். இதில் வீடு கட்டுவதற்கு நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி நிர்வாகத்தால் (தற்போது நகராட்சி) கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அப்போது இதுகுறித்து எங்கள் நல சங்கம் சார்பில் பேரூராட்சியிடம் முறையிட்டும் பயன் இல்லை. இதுகுறித்து பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட மேற்கூறிய அனைத்து இடங்களையும் மீட்டு தர கோரி மாவட்ட கலெக்டருக்கு மனு கொடுத்தோம். அதன் பேரில் விசாரணை நடந்து முடிந்த நிலையில் தவறுதலாக வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யாமல் காலத்தை கடத்தி வருகின்றனர். எனவே கடந்த 10 ஆண்டுகளாக நிலவில் உள்ள பொது இடங்களை கையாகப் படுத்தி அறிவிப்பு பலகையை வைக்கும் படியும் நகராட்சி நிர்வாகத்தின் பேரில் பட்டா மாற்றம் செய்திடவும் அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் மனுவை பெற்றுக் கொண்ட நகராட்சி ஆணையர் ராணி இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தனர். இதனை அடுத்து அனைவரும் கலந்து சென்றனர். இதில் டிபன்ஸ் காலனி குடியிருப்போர் நல வாழ்வு சங்க தலைவர் நாகராஜன், பொருளாளர் கலிபத்துல்லா, மதிமுக நகர பொருளாளர் செங்குட்டுவன், இளைஞர் அணி துணை செயலாளர் அஜ்மீர் உட்பட ஏராளமான உடன் இருந்தனர். மேலும் .6 கோடி மதிப்புள்ள பொது சொத்துக்களை மீட்க வலியுறுத்தி நந்திவரம்கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு பொதுமக்கள் மனு கொடுத்ததால் நேற்று காலை பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# தூத்துக்குடி மாவட்டம் அரசின் பல்வேறு துறைகள் சார்பில் 91 பயனாளிகளுக்கு ரூ.35,06,190 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கிய மாவட்ட ஆட்சியர்

கோவில்பட்டி ஜன.9

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வட்டம், சித்திரம்பட்டி கிராமத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் வருவாய்த் துறை, மாவட்ட தொழில் மையம், வேளாண்மை மற்றும உழவர் நலத்துறை, தோட்டக் கலைத்துறை, கூட்டுறவுத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை போன்ற அரசுத்துறைகள் சார்பில் 91 பயனாளிகளுக்கு ரூ.35,06,190 மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், பேசும் போது தெரிவித்ததாவது:

பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று அவற்றை பரிசீலனை செய்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் படுகிறது. மக்கள் தொடர்பு முகாமினை முன்னிட்டு பொது மக்களிடமிருந்து முன்னோடி



மனுக்கள் பெறப்பட்டு, அவற்றை பரிசீலனைசெய்து தகுதியான மனுதாரர்களுக்கு அவர்களுக்குரிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றைய தினம் நடைபெறும் இந்த மக்கள் தொடர்பு முகாமில், வருவாய் துறையின் மூலமாக 3 பயனாளிகளுக்கு ரூ.1,48,500 மதிப்பிலான இலவச வீட்டு மனைப்பட்டாக்களும், 21 பயனாளிகளுக்கு ரூ.9,19,040 மதிப்பிலான வரன்முறைப்படுத்தப்பட்ட இலவச வீட்டு மனைப்பட்டாக்களும், 23 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் உத்தரவுகளும், 02 பயனாளிகளுக்கு ரூ.45,000 இயற்கை மரணத்திற்கான உதவித்தொகைகளும், 03 பயனாளிகளுக்கு ரூ.11 ஆயிரம் கல்வி உதவித்தொகைகளும், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலமாக 12 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகளையும், கூட்டுறவுத்துறை மூலமாக 19 பயனாளிகளுக்கு ரூ.5,50,000க்கான கால் நடை பராமரிப்புக்கடன் உதவிகளையும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் மூலமாக 3 பயனாளிகளுக்கு ரூ.6,650 மதிப்பிலான இடுபொருட்களையும், தோட்டக் கலைத்துறையின் மூலமாக 2 பயனாளிகளுக்கு ரூ.24,000



மதிப்பிலான இடுபொருட்களையும், மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக 2 பயனாளிகளுக்கு சுயதொழில் (ஜவுளி வியாபாரம், நிலக்கடலை சார்ந்த பொருட்கள் தயாரித்தல்) தொடங்குவதற்கு ரூ.16.96 இலட்சத்திற்கான வங்கிக் கடனுதவிகளும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை யின் மூலமாக 1 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,06,000 மதிப்பிலான விலையில்லா மின்கலம் பொருத்தப்பட்ட சிறப்புச் சக்கர நாற்காலியும் என மொத்தம் 91 பயனாளிகளுக்கு ரூ.35,06,190/ மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப் படுகிறது.

இதுபோன்ற அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் கடைக்கோடி கிராமங்களில் வசிக்கக்கூடிய மக்களுக்கு சென்று சேர வேண்டுமென்ற நோக்கத்தில் தான் இந்த மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி இந்த மாதத்திற்கான மக்கள் தொடர்பு திட்ட முகாம் தூத்துக்குடி மாவட்டத்தின் கடைக்கோடி எல்லை பகுதியில் அமைந்திருக்கக்கூடிய சித்திரம் பட்டி என்ற ஊரில் இன்று நடத்துகிறோம்.

அதுமட்டுமல்லாமல், பல்வேறு அரசுத்துறைகள் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் பற்றியும், திட்டங்களின் பயன்கள் குறித்தும் பொதுமக்கள் அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மாவட்ட தொழில் மையம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத்துறைகள் சார்பில் கருத்துக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது அதனை அனைவரும் பார்வையிட்டு அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து பயன்பெற வேண்டும். ஆகையால் சித்திரம்பட்டி நமது மாவட்டத்தினுடைய கடைசி எல்லைப்பகுதியாக இருந்தாலும் இந்த கிராமத்திற்கு தேவையான அனைத்து நலத்திட்டங்கள், வளர்ச்சித்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அனைத்துத் திட்டங்களும் சென்றடையும் வகையில் அனைத்துத்துறைகளும் முழு முயற்சியை எடுக்கும் என்று இந்த நேரத்தில் உங்களுக்கு உறுதி அளித்து அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன் என மாவட்ட ஆட்சியர் க.இளம் பகவத், தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் மகாலட்சுமி, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் விஜயலட்சுமி, சமூக பாதுகாப்பு திட்ட தனித் துணை ஆட்சியர் ஹபிபூர் ரஹ்மான், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் விக்னேஷ்வரன், மாவட்ட வழங்கல் அலுவலர் உஷா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பென்னட்ஆசிர், இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, உதவி ஆணையர் (கலால்) கல்யாணகுமார், கோவில்பட்டி வட்டாட்சியர் சரவணபெருமாள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தேவி, சித்திரம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் கேசவன், சித்திரம்பட்டி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மாரிச்சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161